*கவனிக்க.- 2023.10.13 ஆந் திகதிய 2354 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வரத்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2355 - 2023 ඔක්තෝබර් මස 20 වැනි සිකුරාදා - 2023.10.20

*2355 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 984 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2023, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3 வகுப்பின் I (அ) தரத்திற்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023

வடமேல் மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் காணப்படும் இலங்கை ஆசிரியர் சேவையின் வெற்றிடங்களுக்காக வடமேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின் அடிப்படையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் I (அ) தரத்திற்கு மாகாண அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட பட்டதாரிகளிடமிருந்து நிகழ்நிலையில் ( Online ) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சிங்கள, தமிழ், ஆங்கில மொழிமூல பாடங்களுக்கு மாகாண அடிப்படையில் பட்டதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், ஒரு விண்ணப்பதாரிக்கு ஆகக் கூடுதலாக 3 பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

2. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களுக்குரிய பாடங்களுக்குக் காணப்படும் வெற்றிடங்களின் பட்டியல் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கும் போது அந்தப் பாடங்களுக்காக தரப்பட்டுள்ள பட்டத் தகைமையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

3. தமது பட்டத்திற்கு விண்ணப்பிக்கக் கூடிய பாடங்கள் தொடர்பில் விண்ணப்பதாரிகள் கவனத்திற் கொள்ள வேண்டியதுடன், பட்டத்திற்காக கற்ற பிரதான பாடம் அல்லது பாடங்கள் தொடர்பாக மாத்திரம் குறித்த ஆசிரியர் வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

4. **சம்பள அளவுத் திட்டம் :**

   இப்பதவி 05.01.2022 ஆம் திகதி கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 (IV) இன் இலக்கம் ஜீ.ஈ. 1 - 2016 - ஏ சம்பளத் திட்டத்தின் ரூ. 31,490 - 6 x 445 - 7 x 525 - 2 x 600 - ரூ. 39,035.00 என்ற மாதாந்த சம்பள அளவுத் திட்டம் உரித்துடையதாகும் என்பதுடன் இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 14 ஆம் கட்டமான ரூ 37,835.00 சம்பளமாக வழங்கப்படும்.

5. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

   5.1. கல்வித் தகைமைகள் -

   I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஏற்றுக் கொள்ளப்படும் விசேடமாக்கப்பட்ட துறைகள் சார்ந்த, அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்குரிய பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   II. கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியுடன் கணித பாடத்திலும் சித்தியடைந்திருத்தல்.

   5.2. உடல் மற்றும் உளத் தகைமை :

   சகல விண்ணப்பதாரிகளும் ஆசிரியர் ஒருவராக கடமையாற்றுவதற்கு தகுந்த உடல், உள ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.

   5.3. வயது :

   விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்த வயதெல்லை 18 ஆகும். ஆகக் கூடிய வயதெல்லை 35 ஆகும்.

5.4. ஏனைய தகைமைகள்:

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும் ;

II. சிறந்த நற்பண்புகளைக் கொண்டவராகவும், உடலாரோக்கியம் மிக்கவராகவும் காணப்பட வேண்டும் ;

III. வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்ற தயாராக இருக்க வேண்டும் ;

IV. விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்தது அண்மிய 03 வருட காலமாவது வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளர் என்பதை கிராம அலுவலகரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் ( DS 04 கிராம அலுவலர் சான்றிதழ் ) மூலம் நேர்முகப் பரீட்சையின் போது உறுதிப்படுத்த வேண்டும் ;

V. விண்ணப்பதாரி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வடமேல் மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகாக் கொள்ளாதவராக இருந்தாலும், அவரின் வாழ்கைத் துணை அண்மிய 03 ஆண்டுகளில் நிரந்தர வதிவைக் கொண்டிருந்தால் அவர்களின் விண்ணப்பமும் கருத்தில் கொள்ளப்படும். (வாழ்க்கைத் துணையின் வதிவிடச் சான்றிதழ் (DS 04 கிராம அலுவலர் சான்றிதழ் ) மற்றும் விவாகச் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.)

6. **சேவை நிபந்தனைகள் :**

6.1. அரசாங்க / மாகாண அரசாங்க சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், வடமேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அந்த யாப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்புக்கு நியமிக்கப்படுவார்கள்.

6.2. இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்துடைய ஓய்வூதியம் தொடர்பில் அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நியமனம் பெற்றுக் கொள்பவர்கள் கட்டுப்பட வேண்டும்.

6.3. இப்பதவிக்கு நியமிக்கப்படுவது 03 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டாகும்.

6.4. வடமேல் மாகாண சபை அரச சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

6.5. 2020.10.16 ஆம் திகதி அ.நி.சு 18/2020 இன் படி பணியிலமர்ந்து 03 வருடங்களுக்குள் பதவிக்கு விதிக்கப்பட்டுள்ள இரண்டாம் அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

6.6. நியமனம் பெற்றுக் கொள்வோர் முதல் நியமனம் பெறும் கல்வி வலயத்தினுள் குறைந்த பட்சம் 05 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும் என்பதுடன் குறித்த 5 வருட காலத்தினுள் இடமாற்றத்தை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியாது.

6.7. தமது முதல் நியமனம் பெறும் பாடசாலை கஷ்டப் பாடசாலை / அதி கஷ்டப் பாடசாலையாக இல்லாதவிடத்து தமது சேவைக்காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது குறைந்த பட்சம் 05 வருடங்கள் கஷ்டப் பாடசாலை / அதி கஷ்டப் பாடசாலை ஒன்றில் கடமையாற்றுவதற்கு கடப்பாடுடையவராவார்.

7. **ஆட்சேர்ப்பு :**

7.1. ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறைமை ;

வடமேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின் விதிமுறைகளுக்கு உட்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

7.2. எழுத்து மூலப் பரீட்சை ;

இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

| பாடம் | உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொது உளச் சார்பு ( 01 மணித்தியாலம்) | 100 | 40 |
| பொது அறிவுப் பரீட்சை ( 01 மணித்தியாலம் ) | 100 | 40 |

பாடத் திட்டம்

பாட இலக்கம் 01 – பொது உளச் சார்பு சோதனை

விண்ணப்தாரியின் திறன்கள், தர்கத் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கில் இந்த வினாப் பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு அல்லது குறு விடை வினாக்கள் 50 ஐ உள்ளடக்கி இருக்கும். இந்த சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
( ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் )

பாட இலக்கம் 02 - பொது அறிவு

சமூக, பொருளாதார, அரசியல் துறைகள் தொடர்பில் பொது அறிவைப் பரீட்சிக்கும் பல்தேர்வு வினாக்கள் 50 ஐக் கொண்டிருக்கும்.
( ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் )

7.3. பரீட்சை விதிமுறைகள் ;

I. இப்பரீட்சைக்கு சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் விண்ணப்பிக்கலாம் ;

II. சகல விண்ணப்பதாரிகளும் இரண்டு ( 02 ) வினாப் பத்திரங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டும் ;

III. சகல விண்ணப்பதாரிகளும் சகல வினாப் பத்திரங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியது ஒரே மொழி மூலத்திலாகும். அந்த மொழி மூலம் அவர் நியமனம் பெற எதிர்பார்க்கும் மொழி மூலமாக இருக்க வேண்டும் ;

IV. ஆங்கில மொழி பாடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் ஆங்கில் மொழி மூலம் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் ;

V. விண்ணப்பதாரிக்கு தன்னுடைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

7.4. நேர்முகப் பரீட்சை ;

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருக்கிறாரா என்பதைப் பரீட்சித்தல், உடல் தகைமை மற்றும் உளத் தகைமையைப் பரீட்சித்தல், பட்டம் வகுப்பு சித்தி மற்றும் மேலதிக தகைமைகள் என்பவற்றுக்கு புள்ளிகளை வழங்குவதற்காக நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

( அ ) வகுப்புச் சித்திகளுக்காக புள்ளி வழங்கல் பின்வருமாறு அமையும். (அதிக பட்சம் 07 புள்ளிகள் )

| | |
|---|---|
| 1 ஆம் வகுப்பு | 07 புள்ளிகள் |
| 11 ஆம் வகுப்பு உயர் | 05 புள்ளிகள் |
| 111 ஆம் வகுப்பு கீழ் | 03 புள்ளிகள் |

(ஆ) மேலதிக தகைமைகளுக்குப் புள்ளிகளை வழங்குதல் ( அதிக பட்சம் 10 புள்ளிகள்)

| தொ. இல. | நியதிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01 | தர்மப் பாடசாலை இறுதிப் பரீட்சை சான்றிதழ் அல்லது ஏனைய மதம் ஒன்றிற்கு அதற்குச் சமனான பரீட்சை ஒன்றில் சித்தி பெற்றமையை உறுதி செய்வு ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் | 05 |
| 02 | விளையாட்டு, அழகியல் போன்ற இணைப் பாடவிதான செயற் பாடுகளில் அரசின் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போட்டி ஒன்றில் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற சான்றிதழைப் பெற்றிருத்தல். | 05 |
| | மொத்தப் புள்ளிகள் | 10 |

7.5. செயன்முறைப் பரீட்சைக்காக புள்ளிகளை வழங்குதல். ( அதிக பட்சம் 08 புள்ளிகள் )

செயன்முறைப் பரீட்சையில் விண்ணப்பதாரி விண்ணப்பித்த பாடத்திற்குப் பொருத்தமான தலைப்பு ஒன்றின் கீழ் 05 நிமிடங்களுக்கு குறையாத நிகழ்த்துகை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இங்கு விண்ணப்பதாரியின் கருத்து வெளியீட்டு திறமை, தொடர்பாடல் திறமை தொடர்பில் விஷேடமாக அவதானம் செலுத்தப்படும்.

8. **பரீட்சை நிலையம் :**

மேற்படி போட்டிப் பரீட்சை பின்வரும் நகரங்களில் நடைபெறும். பரீட்சை நிலையம் ஒன்றை நிறுவுவதற்குப் போதுமான எண்ணிக்கையில் விண்ணப்பதாரிகள் இல்லாத போது அருகில் உள்ள பரீட்சை நிலையம் ஒன்றிற்கு அனுப்பப்படுவார்கள்.

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| குருநாகல் | குருநாகல் | 1 |
| குருநாகல் | குளியாபிடிய | 2 |
| குருநாகல் | மஹவ | 3 |
| புத்தளம் | புத்தளம் | 4 |
| புத்தளம் | சிலாபம் | 5 |

9. **தெரிவு செய்யும் முறை :**

( அ ) வடமேல் மாகாண அரசாங்க சேவையின் ஆசிரியர் சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் தெரிவு செய்தல் நடைபெறும்.

( ஆ ) ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி இரண்டு ( 02 ) அல்லது மூன்று ( 03 ) பாடங்களுக்கு தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நியமனம் வழங்கும் பாடம் தொடர்பில் வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழு தீர்மானம் எடுக்கும்.

10. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக ரூ. 1200.00 ஐ வடமேல் மாகாண சபையின் வருமானத் தலைப்பு 2003-02-13 வரவு வைக்கப்படுமாறு வதிவிடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் காரியாலயத்தில் செலுத்தி தன்னுடைய பெயரில் பெற்றுக் கொள்ளும் வமே. மா.ச.நி. 2 பற்றுச் சீட்டினை பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். வமே.மா.ச.நி. 2 பற்றுச் சீட்டினை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுக்கள் அல்லது காசுக் கட்டளைகள் எவையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவ்வாறான பற்றுச் சீட்டுக்களை முன்வைக்கும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது என்பதையும், எந்தக் காரணத்திற்காகவும்

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும், அந்தப் பரீட்சைக் கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். (கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற் படப் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பின்னர் பயனளிக்கலாம்.)

*11.* **விண்ணப்பிக்க வேண்டிய ஒழுங்கு :**

*11.1.* (அ) இந்த ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுதல் நிகழ்நிலையில் psc.nw.gov.lk என்ற இணையத் தளத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். psc.nw.gov.lk என்ற இணையத்தளத்திற்குப் பிரவேசித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை PDF வடிவிலான கோப்பாக பதிவிறக்கம் செய்து அதில் அச்சு பதித்த பிரதி ஒன்றினையும் முன்வைக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பித்த பாடம் / பாடங்கள் /மாவட்டம் எக்காரணம் கொண்டும் மாற்றப்பட மாட்டாது என்பதுடன், ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பத்தினை மாத்திரமே முன்வைக்க முடியும்.

(இ) பதிவிறக்கம் செய்து அச்சுப் பதித்துக் கொண்ட பிரதியில், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டினை அதற்குரிய இடத்தில் ஒட்டி, வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் தபாலில் அனுப்ப வேண்டும். (பதிவிறக்கம் செய்து அச்சுப் பதித்ததன் நிழற் படப் பிரதி ஒன்றை தம் வசம் வைத்திருத்தல் பயனளிக்கலாம்)

(ஈ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2023.11.17 ஆகும்.

*11.2.* நிகழ்நிலையில் முறைப்படி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியை 2023.11.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

செயலாளர்,
வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.

விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"**வடமேல் மாகாண ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023**"** என்பதோடு வதியும் மாவட்டத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

முறையாக பரீட்சைக் கட்டணம் செலுத்தி 2023.11.17 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் இணையத் தளத்தின் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து, அச்சுப் பிரதியை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிச் சீட்டு வழங்கப்படும். ஆனாலும் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படலானது மேற்கூறிய தகைமைகளை பூர்த்தி செய்தமையை ஏற்றுக் கொண்டதாகக் கருதப்பட மாட்டாது.

*11.3.* விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல் ;

பதிவிறக்கம் செய்து கொண்ட விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு ஒருவர், முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 41,580.00 க்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையின் பதவி நிலை அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

12. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்** :

பரீட்சார்த்திகள் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கு தோற்றும் போது தம் ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் மூலம் உறுதி செய்ய வேண்டும்

( அ ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

அல்லது

( ஆ ) செல்லுபடியான கடவுச் சீட்டு/செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்

குறிப்பு :- பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்தி ஒருவர் தன்னுடைய ஆளடையாளத்தை உறுதி செய்யத் தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

13. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். அந்தத் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது. இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி பரீட்சைக்கு, நேர்முகப் பரீட்சைக்கு, செயன்முறைப் பரீட்சைக்குத் தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவத்தை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரி ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பொய்யான தகவல்களை வழங்கி இருக்கிறார் என்றோ அல்லது உண்மையான தகவல்கள் வேண்டும் என்றே மறைத்திருக்கிறார் என்றோ தெரிய வந்தால் அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

14. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி உரிய பற்றுச் சீட்டினை உரிய தகவல்களோடு பூரணப்படுத்திய நிகழ்நிலை விண்ணப்பத்தையும், அதன் அச்சுப் பிரதியையும் முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரால் பரீட்சை அனுமதி அட்டையும், பின்னர் நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கான கடிதங்களும் வழங்கப்படும். நேர்ரமுகப் பரீட்சையில் சித்தியடையத் தவறும் எவரும் செயன்முறைப் பரீட்சைக்கு தகைமை பெறாத விண்ணப்பதாரிகள் செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவின் அலுவலக இணையத் தளத்தில் (www.psc.nw.gov.lk) அறிவித்தல் விடுக்கப்படும். நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை நடைபெறும் திகதிக்கு 03 நாட்கள் முன்னர் வரை பரீட்சை அனுமதிச் சீட்டு / அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக 'செயலாளர் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்' என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது பின்வரும் விபரங்களை வழங்க வேண்டும்.

I. விண்ணப்பதாரியின் பெயர் :
II. முகவரி :
III. தேசிய ஆளடையாள அட்டை இல. :
IV. விண்ணப்பதாரியின் தொலைபேசி இலக்கம் :

15. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் தொடர்பில் அல்லது அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் அல்லது இந்த அறிவித்தலில் ஏற்பாடுகள் இல்லாத ஏதேனுமோர் விடயம் தொடர்பில் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக கருதப்படும்.

16. இந்தப் பரீட்சையை நடாத்துதல், பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் அல்லது தெரிவு செய்யாமல் விடுதல் வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

17. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் மொழிப் பிரயோகங்கள் தொடர்பில் இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

ஈ.எம்.பி. ஏகநாயக
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2023 ஒற்றோபர் 19.

**வடமேல் மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3 வகுப்பின் I (அ) தரத்திற்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023**

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| | ஆரம்பப் பிரிவு ( 1 ஆம் தரம் முதல் 5 ஆம் தரம் வரை ) | |
| 1 | ஆரம்பப் பிரிவு | I. மொத்த கற்கைக் காலத்தினுள் சிங்கள /தமிழ் மொழியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் ; அல்லது விசேட பட்டம் ; அல்லது<br><br>II. எந்தவொரு பட்டத்துடனும் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சிங்களம் /தமிழ் பாடத்தில் திறமை அல்லது அதற்கு மேற்பட்ட சித்தி ஒன்றைப் பெற்றிருத்தல்; அல்லது<br><br>III. ஏதேனுமொரு பட்டத்துடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ் பாடத்திற்கு அதி விசேட சித்தி ஒன்றைப் பெற்றிருத்தல் மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தி ஒன்றைப் பெற்றிருத்தல். |
| | இடைநிலைப் பிரிவு ( தரம் 6 - 11 வரை ) | |
| 2 | விஞ்ஞானம் | I. உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய விஞ்ஞானமாணி / பிரயோக விஞ்ஞானமாணி பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. உயர் தரத்தில் உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல்; அல்லது<br><br>II. ஏதேனும் ஒரு விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. உயர் தரத்தில் உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். |
| 3 | கணிதம் | I. கணிதப் பாடத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி /பிரயோக விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. உயர் தரத்தில் இணைந்த கணிதம் /கணிதப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்; அல்லது<br><br>II. ஏதேனும் ஒரு பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த உயர் தரத்தில் இணைந்த கணிதம் /கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| 4 | முதலாம் மொழியும் (சிங்களம்) இலக்கியமும் | மொத்த கற்கைக் காலத்தினுள் சிங்களம்/சிங்கள மொழியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம்; அல்லது விசேட பட்டம் |
| 5 | முதலாம் மொழியும் (தமிழ்) இலக்கியமும் | மொத்த கற்கைக் காலத்தினுள் தமிழ் /தமிழ் மொழியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம்; அல்லது விசேட பட்டம் |
| 6 | தமிழ் | மொத்த கற்கைக் காலத்தினுள் ஆங்கிலம் /ஆங்கில இலக்கியம் /தமிழ் மொழியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம் |
| 7 | வரலாறு | மொத்த கற்கைக் காலத்தினுள் வரலாறு /தொல்லியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் |
| 8 | புவியியல் | மொத்த கற்கைக் காலத்தினுள் புவியியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம்; அல்லது விசேட பட்டம் |
| 9 | கீழைத்தேய இசை | I. மொத்த கற்கைக் காலத்தினுள் கீழைத்தேய இசையை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட அரங்கியல் தொடர்பான கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம்; அல்லது<br><br>II. மொத்த கற்கைக் காலத்தினுள் கீழைத்தேய இசையை ஒரு பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம் ஒன்றுடன் க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி ; அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். |
| 10 | சித்திரம் | I. மொத்த கற்கைக் காலத்தினுள் சித்திரம் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கவின் கலைமாணி அல்லது அரங்கக் கலைமாணி அல்லது நுண் கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டம் ; அல்லது<br>II. மொத்த கற்கைக் காலத்தினுள் சித்திரம் ஒரு பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் சித்திரப் பாடத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். |
| 11 | கீழைத்தேய நடனம் | I. மொத்த கற்கைக் காலத்தினுள் கீழைத்தேய நடனத்தைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட அரங்கேற்றக் கலை தொடர்பான கலைமானிப் பொது பட்டம் ; அல்லது விசேட பட்டம்<br><br>II. மொத்த கற்கைக் காலத்தினுள் கீழைத்தேய நடனத்தை ஒரு பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணிப் பொது பட்டம் அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் கீழைத்தேய நடனத்தில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். |
| 12 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | மொத்த கற்கைக் காலத்தினுள் தகவல் தொழில்நுட்பம் /கணினியியல் ஆகிய பாடங்களில் ஒன்றை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட விஞ்ஞானமாணி / முகாமைத்துவ தகவல் தொழில்நுட்பவியல் /கலைமாணி /தகவல் தொழில்நுட்பவியல் பொது அல்லது விசேட பட்டம் |
| 13 | விவசாயமும் உணவுத் தொழில் நுட்பமும் | விவாசயவியல் தொடர்பான விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டம் அல்லது விவசாய உணவுத் தொழில்நுட்பவியலை பிரதான பாடமாகக் கொண்ட பொது அல்லது விசேட பட்டம் |
| 14 | சுகாதாரமும் உடற்கல்வியும் | I. விளையாட்டியல் மற்றும் முகாமைத்துவம் /உடற்கல்வி தொடர்பான பொது அல்லது விசேட பட்டம் ;<br><br>II. விளையாட்டு மற்றும் மனமகிழ் முகாமைத்துவம் தொடர்பிலான விசேட கலைமாணிப் பட்டம். |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை |
|---|---|---|
| | மூன்றாம் நிலைப் பிரிவு ( தரம் 12 - 13 ) | |
| 15 | கணக்கீடு | கணக்கீடு /கணக்கியல் தொடர்பான விசேட பட்டம் அல்லது பூரண கற்கைக் காலத்தினுள் கணக்கீடு /கணக்கியல் பாடத்தை ஒரு பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட வணிக நிர்வாகமாணி /வணிக முகாமைத்துவமாணி /வணிகமாணி விசேட பட்டம் |
| 16 | வணிகக் கல்வி | வணிகக் கல்வி /வணிகவியல் ஆகிய ஒன்றைப் பாடப் பரப்புக்குள் உள்ளடங்கும் பாடங்களை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட வணிகமாணி /வணிக நிர்வாகமாணி / விஞ்ஞானமாணி வணிக /முகாமைத்துவமாணி விசேட பட்டம் |
| 17 | பொருளியல் | பொருளியல் தொடர்பான விசேட பட்டம் |

**வடமேல் மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3 வகுப்பின் I (அ) தரத்திற்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023**

| | பாடம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரம்பப் பிரிவு | 326 | 39 | 0 |
| 2 | விஞ்ஞானம் | 53 | 2 | 3 |
| 3 | கணிதம் | 57 | 19 | 2 |
| 4 | சிங்கள மொழியும் இலக்கியமும் | 21 | 0 | 0 |
| 5 | தமிழ் மொழியும் இலக்கியமும் | 0 | 2 | 0 |
| 6 | ஆங்கிலம் | 0 | 0 | 43 |
| 7 | வரலாறு | 21 | 4 | 0 |
| 8 | புவியியல் | 13 | 1 | 4 |
| 9 | கீழைத்தேய இசை | 12 | 0 | 0 |
| 10 | சித்திரம் | 24 | 4 | 0 |
| 11 | கீழைத்தேய நடனம் | 12 | 0 | 0 |
| 12 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 23 | 10 | 3 |
| 13 | உணவும் விவசாயத் தொழில்நுட்பமும் | 14 | 3 | 0 |
| 14 | சுகாதாரமும் உடற்கல்வியும் | 10 | 5 | 0 |
| 15 | கணக்கியல் | 5 | 1 | 0 |
| 16 | வணிகக் கல்வி | 3 | 0 | 1 |
| 17 | பொருளியல் | 4 | 1 | 0 |
| | மொத்தம் | 598 | 91 | 56 |

10 - 404

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.